மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை - 2021
----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 மறுப்பு அபிப்பிராயம்

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் மற்றும் துணைகளின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்கான தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுக்களிற்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம், 1972 இலக்கம் 11 கொண்ட அரச விவசாய கூட்டுத்தான சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் ஆகியவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கையின் 1.5 ஆம் பகுதியில் கலந்துரையாடியுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயமொன்றிற்கான அடிப்படையொன்றை வழங்க போதிய மற்று பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்ள என்னால் முடியவில்லை.

1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.தே.க.ச) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

	குறித்த நியமத்தின் தொடர்புடனான இனக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையினால் குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ள ஹெக்டயார் 123,306.37 உள்ளடங்களாக சபைக்கு சொந்தமான மொத்த காணி அளவு ஹெக்டயார் 142,592.27 அளவு ஆன போதும் இந்த காணிகளின்	மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையிற்கு சொந்தமான தோட்டங்கள் வரிசை அமைச்சின் அனுசரணையின் கீழ் நில அளவை நடவடிக்கைகள் நடைபெற்று வருவதுடன் ஹெக்டயார் 2803	கணக்கீட்டு நியமம் பிரகாரம் காணிகளின் பெறுமதியை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் ஆதன பொறிகள்

	பெறமதியை இலங்கை கணக்கீட்டு நியமம் 40 இன் 34 பந்தி பிரகாரம் மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. மேலும் ஹெக்டயார் 2,872.45 ஆன காணி அளவொன்றை சபையினால் 2025 மார்ச் 25 திகதி வரையும் திட்டவட்டமாக இனங்கண்டிருக்கவில்லை.	ஆன 04 தோட்டங்களின் அளவை நடவடிக்கைகளிற்காக வரிசை அமைச்சின் மூலம் நில அளவைத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், காணி பிரிவினால் கிடைத்த தகவல்களின் பிரகாரம் அந்த காணிகள் தற்போதுஅளவை நடவடிக்கைகள் மேற்கொண்டு முடிவடைந்துள்ள போதும் வரிசை அமைச்சின் மூலம் நில அளவை திணைக்களத்திற்கு கொடுப்பனவு செய்யப்படாததனால் அந்த தளக்கோல அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கு இதுவரை முடியாமலிருந்தது.	மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், இனங்காணப்படாத காணிகளை இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 பந்தி பிரகாரம் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களில் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட்காலத்தை குறைந்த பட்சம் ஒவ்வொறு நிதி ஆண்டின் போதும் மீளாய்வு செய்து மீண்டும் மதிப்பீடு செய்ய வேண்டிய போதும, மீளாய்வாண்டு இறுதிவரை தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாக பெறுமான தேய்வு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 503,460,537 தொகை ஆதன பொறிகள் மற்றும் உபகரண கிரயம் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்த சொத்துககளில் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட்காலத்தை மீண்டும் மதிப்பீடு பெற்றுக்கொள்ள குழுவொன்றை நியமனம் செய்து அந்த குழுவிற்கு மதிப்பீட்டு உத்தியோகத்தர்களை தெரிவு செய்துகொள்வதற்காக பெறுகைகள் பிரிவிற்கு அனுப்பியுள்ளது. அந்த செயன்முறை இடம்பெற்றதன் பின்னர் உரிய மதிப்பீட்டு பெறுமதிகளை கணக்குகளிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீட்டு நியமம் பிரகாரம் முழுமையாக பெறுமான தேய்வு செய்யப்பட்டிருந்த மீண்டும் பயன்படுத்தும் சொத்தக்களை மதிப்பிட்டு கணக்கீடு செய்ய வேண்டும்.
(இ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 55 பந்தி பிரகாரம் மற்றும் சபையின் கணக்கீட்டுக் கொள்கை 3.2.3 பிரகாரம் சொத்துக்களை பயன்படுத்துவதற்கான தயார் நிலைக்கு கொண்டு வந்த பின்னர் அந்த சொத்துக்களை பெறுமானத் தேய்விடலை ஆரம்பிக்க வேண்டிய போதும், 2021 ஆண்டினுள் தோட்டங்கள் மற்றும் பிரதான அலுவலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 22,393,425 ஆன நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்த திகதியை கவனத்திற் கொள்ளாது முழு வருடத்திற்கும் பெறுமானத் தேய்விடப்பட்டு இருந்தது.	பிரதான அலுவலகத்தின் 2022 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் சரியாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ளதுடன், 2021 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டிற்கும் செய்த பெறுமான தேய்வை 2022 ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. தோட்ட பிரிவும் 2021 ஆண்டு முதல் சரியாக கொள்வனவு செய்த திகதி முதல பெறுமானத் தேயிவை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	கணக்கீட்டு நியமம் பிரகாரம் சொத்துக்கள் அந்த சொத்துக்களை பயன்பாட்டு நிலைக்கு கொண்டுவந்த திகதி முதல் பெறுமான தேயிவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஈ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 50 பந்தி பிரகாரம நிறுவனத்தின் சேவை நலனகள் கடப்பாடு கணக்கிடுகையில் ஆயுள்கணக்கிடல் முறையை பயன்படுத்தி கணக்கிடல் செய்ய வேண்டிய பொதும், சபையினால் நலன்கள் கணக்கிடுகையில் ஊழியர் ஒருவரின் ஆண்டிறுதியில் பெறப்படும் அடிப்படை சம்பளத்தை மாத்திரம் அடிப்படையாக கொண்டு சேவை நலன்கள் கணக்கிடப்பட்டிருந்தது.	மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் பணிக்கொடை கணக்கிடல் முன்னரிலிருந்து 1983 இன் 12 இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொழிலாளர் திணைக்களத்தினால் பணிக்கொடை நிலுவை கொடுப்பனவு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது இந்த சட்டத்தின் பிரகாரம் என்பதாகவும் குறிப்பிடுகிறேன் 2024.06.10 திகதி நடைபெற்ற கணக்காய்வு முகாமைத்துவ குழுவின் போதும் பணிக்கொடை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் சரியென குறிப்பிட்டுள்ளது. மேலும் 2020 /2021 நிதிக்கூற்றுக்களில் கொள்கையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது பணிக்கொடை சட்டத்தின பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவது என்பதாகும்.	கணக்கீட்டு நியமம் பிரகாரம் ஆயுள் கணக்கடல் முறை சேவை நலன்கள் கணக்கிடலிற்கு விட ஆக்கபூர்வ முறையாவதால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 41 பின் 12 பந்தி பிரகாரம் ரூபா 40,769,359 ஆன நுகர்வு உயிரியல் விஞ்ஞான ரீதியான சொத்துக்கள் பெறுமதியை வருடாந்தம் மதிப்பீடு செய்யாது நிலையான பெறுமானமாக முன்கொண்டு வரப்பட்டிருந்தது. அவ்வாறு அந்த மீதியை ஒப்பாய்வு செய்து கொள்வதற்காக வருடாந்தம் நாளாதுவரையாக்கப்பட்ட மரக் கணக்கெடுப்பு மற்றும் மதிப்பீட்டு அறிக்கையும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்காததுடன் மீளாய்வாண்டின் போது விற்பனை செய்த நுகர்வு உயிரியல் விஞ்ஞான ரீதியான சொத்துக்களின் விற்பனை வருமானம் ரூபா 131,963,104 ஆன போதும் மரங்களிற்குரிய கிரயத்தை சொத்துக்களிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. ஆவ்வாறு 54(ஈ) பந்தி பிரகாரம் ரூபா 9,052,059 ஆன ஏனைய உயிரியல் விஞ்ஞான ரீதியான சொத்துக்களின் பெறுமானத்	2022, 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் மதிப்பீட்டு அறிக்கை வன வளங்கள் பிரிவினால் பெறப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2021 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் கணக்கு குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு 2024 ஆண்டின் போது கணக்கு மூலம் தேவையான செம்மையாக்கல் மேற்கொண்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. அதே போன்று இந்த ரூபா 7,216,118 ஆன உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் மீதியை தொர்ந்தும் நிலவி வரும் மீதிகள் ஆவதுடன், அதன் சரியான தன்மை கண்டறிந்து எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பெறுமானத்தேய்வு விகிதம் மற்றும் முதிர்சிசியடைந்த காலத்தை வெளிப்படுத்தி	கணக்கீட்டு நியமம் பிரகாரம் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களை மதிப்பிட்டு கணக்கீடு செய்து பெறுமானத் தேய்விட வேண்டும். விற்பனை செய்த மரங்களின் கிரயத்தை சரியாக கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேய்வை கணக்கிட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.	இருக்காத கிராம்பு மற்றும் கோபி பயிர்செய்கைக்குரிய தகவல்கள் 2022 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் கணக்கு மூலம் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	

1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மொன்தகிரிஸ்தோ தோட்டத்தை 2003 ஆண்டு முதல் பல்வேறு தரப்பினர்களிற்கு குத்தகை வழங்கியிருந்ததுடன் இந்த தோட்டத்தில் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதி மற்றும் உயிரியல் விஞ்ஞான சொத்தக்களின் கிரயம் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 32,168,955 ஆனது. இதற்குரியதாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றை பேணிச் செல்லப்பட்டிருக்கததுடன் சொத்துக்கள் தொடர்பாக பௌதீக பரீட்சிப்பொன்றும் பபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்காததனால் அந்த சொத்துக்களின் பெறுமதி மற்றும் இருப்பை கணக்காய்விற்கு உறுதி செய்துகொள்ள முடியவில்லை.	இந்த மொன்தகிரிஸ்தோ தோட்டத்தின் சொத்துக்களிற்குரியதான ஆவணங்கள் இல்லாததனால் இந்த சொத்துக்களை பெறுமானத் தேய்வு செய்திருக்கவில்லை.	நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் காணப்பட்ட சொத்துக்கள் மீதியை பௌதிக ரீதியாக பரீட்ச்சித்து உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமதியினுள் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 39,287,968 ஆன நடைமுறை வேலை மீதியினுள் நடைமுறை வேலையாக இனங்காண முடியாத நன்கொடை மற்றும் ஒரு காவலரின் சம்பளமாக செலுத்தியிருந்த ரூபா 5,129,989 ஆன செலவினமும் உள்ளடங்கப்பட்டிருந்தது.	இந்த நடைமுறை வேலை தொடர்பான விபரங்கள் தோட்டங்களில் காணப்படுவதுடன் அந்த தகவல்களை பிரதான அலுவகத்தினால் தோட்டங்களிலிருந்து கோரிய போதும் இன்னும் அவரகளினால் பதில் வழங்கப்படவில்லை. அதனால் இந்த செலவினம் தொடர்பான தகவல்களை உரிய தோட்டங்களிலிருந்து பெற்றுக்கொண்டு பகுப்பாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தோட்டங்களினால் நடைமுறை வேலைகள் சரியாக இனங்காணுவதற்கு மற்றும் அதற்குள் உள்ளடங்கிய இனங்காண முடியாத செலவினத்தை கணக்குகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் வாடகை கொள்வனவின் கீழ் பெற்றிருந்த ரூபா 6,150,000 கிரயமான 03 டெக்டர் வண்டிகளின் வாடகை கொள்வனவு பொறுப்பாக 2021 ஆண்டிற்குரியதாக ரூபா 3,101,640 தொகையை நிதிக்கூற்றுக்களில் இனங்காண வேண்டிய போதும் சபையினால் ரூபா 5,452,725 தொகையை இனங்கண்ட காரணத்தால் வாடகை கொள்வனவு பொறுப்பு ரூபா 2,351,085 இனால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	தற்போது வாடகை கொள்வனவு கடன்கொடுனர் கணக்கின் மீதியினுள் வாடகை கொள்வனவு உடன்படிக்கை பிரகாரம் வாடகை கொள்வனவாளரிற்கு செலுத்த வேண்டிய மொத்த வட்டி மற்றும் சொத்தின் கிரயம் ஆகிய இரண்டையும் குறிப்பிட்டுள்ள போதும் LKAS 17 வாடகை கொள்வனவு நியமம் பிரகாரம் 2024 ஆண்டில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீட்டு நியமம் பிரகாரம் வாடகை கொள்வனவு பொறுப்புக்களை சரியாக இனங்காண நடவக்கை எடுக்கக வேண்டும்.
(ஆ)	2010 ஆண்டில் பெறுந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் செயற்படுத்திய தோட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களிற்கு உரியதாக கூரை தகரங்களை கொள்வனவு செய்வதற்காக மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் செலவிடப்பட்ட ரூபா 4,136,733 தொகை சபையின் நிதிக்கூற்றுக்களில் வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதியாக 10 ஆண்டுகளிற்கு அதிக காலமாக அறவிடப்படாது காணப்படுவதாக அவதானிக்கப்பட்ட போதும் அதற்கு இணங்க தேவையான ஒதுக்கீட்டை நிதிக்கூற்றுக்களில் மேற்கொண்டு இருக்கவில்லை.	இந்த செயற்திட்டம் 2010 இல் முடிவடைந்துள்ளதுடன், பெறுந்தோட் கைத்தொழில் அமைச்சின் அனுசரணையின் கீழ் இருந்த இந்த செயற்திட்டத்தை மேற்கொண்ட நிறுவனத்தின் மூலம் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு இந்த மீதி அறவிடப்பட வேண்டிய போதும், அந்த நிறுவனமும் தற்போது செயற்படாத நிறுவனமொன்றாவதால் இது தொடர்பாக மேலும் விடயங்களை கண்டறிந்து முன்நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதற்கு மேலதிகமாக நிறுவனத்திற்கு அறவிட முடியாக்கடன் மற்றும் ஐயக்கடன் கொள்ளையொன்றை தயாரிப்பதற்காக 2025 ஆண்டில் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.	பத்து ஆண்டுகளிற்கு அதிக காலமாக காணப்படும் சபைக்கு கிடைக்க வேண்டிய இந்த மீதியை இயலுமான விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டு இறுதியளவில் முதிர்ச்சிக் காலத்தை விஞ்சிய ரூபா 10,000,918 ஆன பயிர்களை முதிர்ச்சி பயிர்களிற்கு மாற்றாது முதிர்ச்சியடையாத பயிர்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.	இம் மீதி பழைய மீதியாவதுடன், இந்த முதிர்ச்சியடையாத பயிர் மீதியினுள் காணப்படும் ரூபா 10,000,918 ஆன பயிர்களின் பௌதீக நிலை மற்றும் தேவையான தகவல்களை கண்டறிந்து பொருத்தமான	பயிர்களின் முதிர்வு காலத்தை இனங்கண்டு சரியாக கணக்குகளிற்கு சீராக்க வேண்டும்.

		செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.	
(ஈ)	2021 திசெம்பர் 31 திகதிக்கு நுகர்வோர் பிரிவில் காணப்பட்ட ரூபா 2,744,595 ஆன இருப்பு மீதியினுள் ரூபா 2,369,453 தேயிலை இருப்பு பௌதீக ரீதியாக காணப்படாத போதும் இருப்பிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே 11 தோட்டங்களிற்கு உரியதாக ரூபா 2,761,476 ஆன இருப்பு பௌதீக ரீதியாக காணப்படாத போதும் நிதிக்கூற்றுக்களில் இருப்பு பெறுமதியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	ரூபா 2,369,453 மீதியானது 2019 ஆண்டின் காலாவதியான தேயிலை இருப்பின் பெறுமதியல்லாததுடன், அது கடந்த ஆண்டுகளிலிருந்து முன்கொண்டு வந்த மீதியாகும். நுகர்வோர் பிரிவினால் அந்த காலாவதியான மற்றும் காலாவதியாகும் தருவாயிலுள்ள தேயிலை இருப்புக்களை மீண்டும் பயன்டுத்த முடியுமான நிலைக்கு மாற்ற refire செயன்முறைக்கு உட்படுத்த தோட்டங்களிற்கு மீண்டும் அனுப்புவதுடன், அந்த செயன்முறைக்கு உட்படுத்தி பின்னர் மீண்டும் சபையின் தலைமை அலுவலகத்திற்கு அழைப்பித்து விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் பிரிவினால் அறிவித்துள்ள போதும் அந்த இருப்புக்களிற்குரிய விலைகள் இந்த கணக்கிற்கு செம்மையாக்கல் இதுவரை மேற்கொள்ளப்படாததுடன், அதனை 2024 ஆண்டில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	பௌதீக ரீதியாக காணப்படாத இருப்பு பெறுமதியை இனங்கண்டு உரிய கணக்குகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	சபையினால் முல்ஹல்கெலே தோட்டத்தில் ரூபா 1,067,176 ஆன பழைய செலுத்த வேண்டிய பணிக்கொடை மீதியை மொத்த செலுத்த வேண்டிய பணிக்கொடை மீதியிலிருந்து கழித்துள்ளதால் சபையின் செலுத்த வேண்டிய பணிக்கொடை மீதி அப் பெறுமதியால் குறைவாக கணிப்பிடப்பட்டிருந்தது.	முல்ஹல்கெலே தோட்டம் தொடர்பாக காணப்படும் ஐந்தொகையில் செலுத்த வெண்டிய பணிக்கொடை மீதியாக வரவுப் பெறுமானமொன்றாக காட்டப்படுவதுடன் இந்த மீதி தொடர்பான தகவல்கள் நிறுவனத்திடம் இல்லை. அதன் காரணமாக அந்த மீதியை 2022 ஆண்டின் ஐந்தொயில் தனியாகக் காட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	இந்த மீதி தொடர்பான தகவல்களை திரட்டிக் கொண்டு தேவையான சீராக்கத்தை செய்ய வேண்டும்.
(ஊ)	1996 ஆண்டிற்கு முன்னரிலிருந்து தொங்கல் கணக்கு மீதியாக காட்டப்படும் ரூபா 4,342,561 ஆன வரவு மீதி மற்றும் ரூபா 1,863,756 ஆன செலவு மீதியை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ரூபா 4,342,561 ஆன இந்த தோட்டத்திற்குரிய மீதி மற்றும் ரூபா 1,863,756 ஆன தலைமை அலுவலகத்தின் தொங்கல் கணக்கு மீதி 1996 ஆண்டிற்கு முன்னரிலிருந்து நிலவிவரும்	தொங்கல் கணக்கு மீதிகளிற்குரிய சான்றுகளை இனங்கண்டு மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		மீதிகளாவதுடன், இது தொடர்பான தகவல்களை தேடிக்கொள்ள முடியவில்லை.	
(எ)	மஹவெலி செயற்திட்டத்தில் மூழ்கி பௌதீக ரீதியாக காணப்படாத மீதி ரூபா 6,013,927 ஆன மஹவெலி அதிகார சபையினால் சுவீகரித்திருந்த ஓனுகல்ஓய தோட்டத்தின் மீதியை நிதிக்கூற்றுக்களில் அகற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ஓனுகல் ஓய தோட்டம் மஹவெலி செயற்திட்டத்திற்காக மஹவெலி அதிகார சபையினால் சுவீகரிக்கப்பட்ட தோட்டமொன்றாவதுடன், அது மஹவெலி செய்றிட்டம் காரணமாக நீரில் மூழ்தியதால் அதற்குரிய நிலையான சொத்துக்களும் பௌதீக ரீயாக காணப்படவில்லை. காணிப் பிரிவினால் வழங்கிய கடதமொன்றின் பிரதியின் பிரகாரம் ஒனுகல் ஓய தோட்டம் மஹவெலி செயற்திட்டத்திற்கு பெற்றுக் கொண்டதாக தகவல்கள் குறிப்பிடப்பட்ட போதும் மேலும் தகவல்களை தேடிக் கொண்ட பின்னர் சொத்துக்களிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.	பௌதீக ரீதியாக காணப்படாத சொத்துக்களை இனங்கண்டு சரியான முறைமை ஒன்றின் ஊடாக கணக்குகளில் இருந்து அகற்ற நடவடிக்கை எகடுக்க வேண்டும்.

1.5.4 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்.

	விடயம்	நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் பெறுமதி	நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி	வேறுபாடு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
		ரூபா	ரூபா	ரூபா		
(அ)	இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திலிருந்து சபைக்கு கிடைக்க வேண்டிய கடன் மற்றும் வட்டி மீதி.	119,318,496	97,709,342	21,609,154	இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தில் இருந்து தோட்ட அபிவிருத்தி சபைக்கு கிடைக்க வேண்டிய கடன் மீதி ரூபா 119,318,496 தொகையை பகுப்பாய்வு செய்து பொழிப்பு அறிக்கையொன்றை எம்மால் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கும், அரச கணக்காய்விற்கு மற்றும் அமைச்சின் கணக்காய்விற்கும் வழங்கப்பட்டள்ளதுடன், எம்மால் அனுப்பிய அறிக்கைக்கு பதிலாக	இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திலிருந்து சபைக்கு கிடைக்க வேண்டிய கடன் மற்றும் வட்டி மீதியை மீண்டும் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வெண்டும்.

					அவர்களினது கணக்குகளின் பிரகாரம் தோட்ட அபிவிருத்தி சபைக்குரிய பேரேட்டு கணக்ககளில் பிரதி மாத்திரம் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் எங்களுக்கு அனுப்பியுள்ளதுடன், போதிய தகவல்கள் இல்லாதமையினால் அந்த கணக்குகள் மற்றும் ஒப்பாய்வு செய்தல் கடினமாக உள்ளது.	
(ஆ)	திரண்ட பெறுமானத் தேய்வின் ஆரம்ப மீதி	901,981,969	898,991,053	2,990,916	2021.01.01 ஜன தேயிலை மற்றும் பலைய் தோட்டங்களில் பெறுமானத் தேய்வு கணக்காய்வு ஐயவினாவில் பெறுமதிக்கு சேர்க்ககப்பட்டு இல்லாதமையினால் இந்தவித்தியாசம் ஏற்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக் களில் பெறுமதிகள், நேரொத்த அறிக்கையுடன் இணங்க வேண்டும்.
(இ)	திரண்ட பெறுமானத் தேய்வின் இறுதி மீதி	931,613,515	928,510,156	3,103,359	2021.01.01 ஜன தேயிலை மற்றும் பலைய் தோட்டங்களில் பெறுமானத் தேய்வு கணக்காய்வு ஐயவினாவில் பெறுமதிக்கு சேர்க்ககப்பட்டு இல்லாதமையினால் இந்தவித்தியாசம் ஏற்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக் களில் பெறுமதிகள், நேரொத்த அறிக்கையுடன் இணங்க வேண்டும்.
(ஈ)	மரங்கள் விற்பனை வருமானம்	129,765,958	131,963,104	2,197,146	கணக்காய்வு ஐயவனைாவில் குறிப்படபப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மரங்கள் விற்பனை வருமானத்தை நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் ரூபா 129,765,958 ஆகும். அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் மற்றும் வன வளங்கள்	நிதிக்கூற்றுக் களில் பெறுமதிகள், நேரொத்த அறிக்கையுடன் இணங்க வேண்டும்.

பிரிவின் மீதிகளிற்கிடையில் வித்தியாசம் ரூபா 2,197,145.96 ஆன தொகை மரங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினமாகியதால் கணக்கு பிரிவினால் அந்த செலவினத்தை குறைத்து நிதிக்கூற்றுக்களில் மரங்கள் விற்பனை வருமானம் காண்பிக்கப்பட்டுள்ளது

1.5.5 அமைப்பின் தொடர்ந்தியங்கும் தன்மை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
தொடர்ந்து நட்டமீட்டுவதன் மீது 2021 திசெம்பர் 31 திகதி சபையின் தேறிய சொத்துக்கள் மற்றும் தொழிற்படு மூலதனம் முறையே ரூபா 1,285,528,242 மற்றும் ரூபா 2,148,404,725 ஆன மறை பெறுமானத்தை எடுத்திருந்ததுடன் அத்திகதிக்கு செலுத்தப்பட இருந்த நியதிச் சட்ட கொடுப்பனவு ரூபா 2,067,043,833 ஆகவிருந்தது. மேலும் மீளாய்வாண்டு இறுதியில் பணிக்கொடை ஒதுக்க மீதி ரூபா 927,760,728 ஆனதுடன் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 636,200,235 ஆன செலுத்த வேண்டிய பணிக்கொடை மீதியும் காணப்பட்டது. இந்த கடப்பாட்டை தீர்க்க போதிய முதலீட்டையும் செய்திருக்காததுடன் தீர்க்கப்படவுள்ள வங்கி கடன் மீதி ரூபா 269,540,047 ஆகவிருந்தது. இதன் பிரகாரம் சபையின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பாக பொருண்மையான நிச்சமற்ற தன்மை காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 2021 ஆண்டின் நிதிக்கூற்றுக்களிற்காக குறிப்பு இலக்கம் 2.4 மூலம் பணிப்பாளர் சபை தீர்மானம் பிரகாரம் சபையை மறுசீரமைக்க வேண்டுமென	சபைக்கு சொந்தமான காணி கட்டிடம் மற்றும் ஏனைய சொத்துக்களை சரியாக மீள்மதிப்பீடு செய்து அப் பெறுமதிகளை ஏடுகளிற்கு எடுக்காத காரணத்தால் மறை பெறுமானமொன்றை பெற்றுள்ளதுடன் மீண்டும் சொத்துக்களை மதிப்பீடு செய்தால் அப்பெறுமதி நேர் பெறுமதியொன்றாகும். எனினும் அப்பணியை மேற்கொள்ள இயலாதிருப்பது நிறுவனத்தில் தொடர்ந்தும் நிலவு தொழிற்படு மூலதன பற்றாக்குறையாகும். அக் காரணத்தினால் இங்கு குறிப்பிடப்படும் நியதிச்சட்ட படிகளைக்கூட செலுத்த முடியாதுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறே அவ்வப் போது ஒவ்வொரு ஆண்டும் திறைசேரியிலிருந்து கிடைத்த தொகையால் இந்த நிலுவை நியதிச்சட்ட படிகள் செலுத்தப்பட்டுள்ளது. 2020 நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பிலக்கம் 2.4 மூலம் காட்டியுள்ள மறுசீரமைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்ற அரசியல் மாற்றங்களின் மீது இடம்பெறாததால் இந்த குறிப்பு 2022 நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.	சபைக்கு சொந்தமான காணி கட்டிடம் மற்றும் ஏனைய சொத்துக்களை சரியாக மீள்மதிப்பீடு செய்து அப் பெறுமதிகளை ஏடுகளிற்கு எடுக்கவும், நிறுவனத்தில் தொடர்ந்தும் நிலவு தொழிற்படு மூலதன பற்றாக்குறையை தவிர்த்துக் கொள்ள மூலோபாயத்தை தயாரித்துக் கொள்ளவும், பணிப்பாளர் சபை முடிவின் பிரகாரம் சபையை மறுசீரமைப்பு செய்ய வேண்டும்.

வெளிப்படுத்தியிருந்த போதும் கணக்காய்வு திகதிய 2025 மார்ச் 03 திகதி வரை அவ்வாறான மறுசீரமைப்பை மேற்கொண்டிருக்கவில்லை.

1.5.6 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

	விடயம்	தொகை	வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரை
		ரூபா			
(அ)	பிரதான அலுவலகத்தின் காணி, கட்டிடங்கள் மற்றும் தோட்டங்களில் கட்டிடங்கள், டாலி வீதியில் அமைந்துள்ள களஞ்சிய அலுவலகம் மற்றும் நுகர்வோர் பிரிவிற்குரிய கட்டிடம், ஏனைய ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் தோட்டங்களினுள் செயற்படுத்தப்பட்டிருந்த நீர் வழங்கள் செயற்திட்டம்.	1,568,000,308	விரிவான அட்டவணை, காணிகளின் தளக்கோலங்கள், திட்டங்கள், மதிப்பீட்டு அறிக்கை, ஒப்படைப்பதற்குரிய வர்த்தமானி பத்திரம், வருடாந்த பௌதீக ஒப்பாய்வு அறிக்கை, சதுர அடி அளவு, பொறியியல் திட்டங்கள், மற்றும் மதிப்பீட்டு அறிக்கை, நிலையான சொத்துக்கள் பதிவேடு சாத்தியப்பாட்டு ஆய்வு அறிக்கை, அங்கீகாரங்கள், செயற்படுத்தப்பட்ட ஆண்டுகள் மற்றும் செலவினங்களை சான்றுறுதி செய்வதற்கான வவுசர்கள், மேற்கொண்ட வேலை அறிக்கை.	பிரதான அலுவலகத்தின் காணி மற்றும் கட்டிடங்களாக குறிப்பிடப்பட்டுள்ள பிரதான அலுவலகத்திற்குரிய காணி மற்றும் கட்டிடங்கள் ரூபா1,503,744,550 இல் உள்ளடங்கிய ரூபா 1,489,375,963 தொடர்பான விரிவான தகவல்கள் 2020 திசெம்பர் 31 திகதியின் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய ஆதனங்கள் மற்றும் கட்டிடங்களிற்குரியதான விரிவான தகவல்களை கண்டறிய முடியாமல் உள்ளன.	பிரதான அலுவலக கட்டிடங்கள், காணி மற்றும் கட்டிடங்களின் மீதி உறுதி செய்ய பதிவேடுகள் சான்றுகள் பேணிச்சென்ற மீதியின் சரியான தன்மையை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	நடைமுறை வேலைகள்	6,685,165	கொடுப்பனவு வவுசர்கள், சம்பளம் கொடுப்பனவு விபரங்கள், கிரய அறிக்கை மற்றும் அங்கீகாரங்கள், அங்கீகரிக்கப்ட்ட மதிப்பீடுகள்	இந்த செயற்திட்டம் தற்போது இல்லாது என லூல்கந்துர தோட்டத்தின் தோட்ட அத்தியட்சகரினால் எழுத்து மூலம் அறிவித்துள்ளதுடன்	நடைமுறை வேலைகளின் பெறுமதியை ஆவணப்படுத்தப்பட்ட சான்றுகள் மூலம் உறுதி செய்ய

				அதற்குரிய செலவு தொடர்பாக தகவலகள் வழங்கப்படவில்லை	நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	உயிரியல் விஞ்ஞான சொதுக்கள் - முதிர்ந்த பயிர்கள்	17,925,652	மரக் கணிப்பீட்டறிக்கை மற்றும் பெறுமதி மதிப்பீடு தொடர்பான அறிக்கை	ரூபா 17,295,652 பெறுமதியான இந்த பழைய பயிர்கள் 2020 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களிற்கு மாற்றி சரிசெய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த மீதிகள் 1996 இற்கு முன்னரிலிருந்து பேரேட்டு கணக்குகளில் முனனோக்கிய மீதிகளாவதுடன், அது தொடர்பான தகவல் அறிக்கையை தேடிக் கொள்ள நிறுவனத்தினுள் இல்லையென.	சொத்துக்களிற்குரிய அறிக்கை மூலம் மீதியை உறுதிப்படுத்த வேண்டியதுடன் மீதியை உறுதிப்படுத்த முடியாது எனில் கணக்குகளிலிருந்து சரியான முறைமையில் அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	தலைமை அலுவலகம் மற்றும் தோட்டங்களிற்கு உரிய வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவை – சீராக்கல் மீதி, பாவனையாளர் பிரிவின் பழைய கடன்படுனர் மீதி மற்றும் கிடைக்க வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி, பெறுந் தோட்ட அபிவிருத்தி செயற்திட்டம்,	98,827,279	மீதி உறுதிப்பாடு, ஐந்தொகை திகதியின் பின்னர் தீர்ப்பனவு மற்றும் காலப்பகுப்பாய்வு மற்றும் அறவிட எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	இந்த மீதிகள் தொடர்பான விரிவான அடட்வணைகள் கணக்கு பிரிவில் இல்லாததுடன் எதிர்காலத்தில் இது தொடர்பான தகவல்கள் கிடைத்த பின்னர் முன்நடவடிக்கை எடுக்கப்படும்.	கிடைக்க வேண்டிய மீதிகளை உறுதி செய்ய மீதி உறுதிப்பாடு மற்றும் ஆவண ரீதியான சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும்.

	பெறுமதிசேர் வரி மீதிகள் மற்றும் குத்தகை வழங்கியுள்ள மொன்தகிரிஸ்டோ தோட்டத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கணக்கிற்குரிய கட்டுப்பாட்டு கணக்கு மீதிகள்				
(உ)	மஹவெலி வீடமைப்பு செயற்திட்டத்திற்காக செலுத்த வேண்டிய மீதி மற்றும் ஒதுக்க மீதியினுள் உள்ளடங்கும் பெறுந்தோட்ட அபிவிருத்தி செயற்திட்ட ஒதுக்க பெறுமதி மற்றும் மாற்றமடையாத பழைய பொது ஒதுக்க பெறுமதி	332,106,721	மீதி உறுதிப்பாட்டு ஆவணங்கள், செய்யப்பட்ட வேலை அறிக்கை மற்றும் உறுதி செய்யப்பட்ட பட்டியல் மற்றும் காலப்பகுப்பாய்வு	மஹவெலி செய்ற்திட்டத்தில் மூழ்கிய வீடுகள் மற்றும் காணிகளை மீண்டும் மறுசீரமைக்க இத் தொகை மஹவெலி அபிவிருத்தி சபையினால் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு வழங்கியுள்ளதுடன் நிறுவனத்தினால் அத் தொகை அந்த பணிக்காக பயன்படுத்தப்படவில்லை. எனினும் இது தொடர்பான தகவல்கள் கணக்கு பிரிவில் இல்லாததுடன் காணிப் பிரிவிடம் வினவப்பட்டுள்ளது. இது தொடர்பான தகவல்கள் கிடைத்த பின்னர் அதற்கான சீராக்கத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.	குறித்த மூல ஆவணங்களை இனங்கண்டு மீதிகளை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஊ)	வாடகை கொள்வனவு சொத்துக்களிற்கு எதிரான வைப்பு (Deposit against Asset Lease) மீதி, காணி மற்றும் கட்டிடங்களை குத்தகை வழங்குவதற்கான முற்பணம், தலைமை அலுவலத்தில் மீள் செலுத்த வேண்டிய வைப்பு, பாதுகாப்பு வைப்புப் பொறுப்பு, பணிக் கொடை பிரிவின் வியாபார கடன்கொடுனர் மீதி மற்றும் தலைமை அலுவலகத்தின் குத்தகை கடன்கொடுனர் மீதி	252,522,867	மீதி உறுதிப்பாட்டு அவணங்கள், வைப்புக்களிற்கு உரிய பற்றுச் சீட்டு, காலப் பகுப்பாய்வு	மீதிகள் 2015 இற்கு முன்னரிலிருந்து நிலவிவரும் மீதிகளாவதால் தற்போது தேவையான தகவல்களை கண்டறிய கடினமாகையால் எதிர்காலத்தில் கிடைக்கும் தகவல்களின் மீது ஒப்பாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	வைப்பு பெறுமதியை உறுதிப்படுத்துவுள்ள ஆவண சான்றுகளை இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(எ)	செலுத்த வெண்டிய வரி பொறுப்புகளிற்கு (VAT,NBT,ESC) மற்றும் செலுத்த வேண்டிய பழைய ஊழியர் சம்பளம் மற்றும் ஊதியம்	226,654,020	உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் கிடைத்த சலுவை காலஎல்லைகள், கால ரீதியான கொடுப்பனவுகளிற்கு உரிய வவுசர்கள், செலுத்தாமைக்கான தெளிபடுத்தல் மற்றும் எழுத்துமூல ஆவணங்கள் மற்றும் காலப்பகுப்பாய்வு மற்றும் விரிவான ஆவணங்கள்	2024 முதல் குறித்த வரி உரியவாறு நிறுவனத்தினால் செலுத்தப்பட்டுள்ளது. 2020.07.22 முதல் 2023.12.31 வரையான காலப் பகுதிக்குரிய பெறுமதி சேர் வரி செலுத்தும் நிறுவனத்தின் பிரகாரம் செயலற்ற காலப்பகுதியாகும். இம் மீதி இதற்கு முன்னரிலிருந்து நிலவிவரும் மீதியாவதுடன், அதன் போது நிலவிய நிதி ரீதியான சிக்கல்கள் காரணமாக செலுத்த	சரியான சான்றுகளின் அடிப்படையில் மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

				முடியாதுள்ளது. எனினும் அத்ந செலுத்த வேண்டியுள்ள நிலுவையை தவணை ரீதியாக செலுத்த எம்மால் இறைவரி திணைக்களத்திற்கு எழுத்துமூல கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் தவணை ரீதியாக செலுத்த நடவடிககை எடுக்கப்படும்.	
(ஏ)	வட்டிக் கடன் எடுத்தல் மற்றும் மக்கள் வங்கியில் பெற்றுக் கொண்ட கடன்	161,060,658	மீதி உறுதிப்பாட்டு ஆவணம், பணிப்பாளர் சபை அங்கீகாரம், கடன் உடன்படிக்கை, வட்டி மற்றும் கடன் செலுத்தல் விபரம் மற்றும் மீதி உறுப்பாடு	மக்கள் வங்கியிலிருந்து பெற்றுள்ள இந்தக் கடன் தொகை மிகவும் பழைய மீதியாவதுடன் இது தொடர்பான தகவல்கள் நிறுவனத்திடம் காணப்படவில்லை. எனினும் எம்மால் இது தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ள மக்கள் வங்கிக்கு அறவித்த போதும் அவர்களினால் எந்தவித தகவல்களையும் எமக்கு வழங்கப்படவில்லை	கடன் மீதிகளை உறுதி செய்ய மக்கள் வங்கியில் இருந்து பெற்றுக் கொண்ட மீதி உறுதிப்பாட்டின் மூலம் உறுதி செய்து தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெற வேண்டிய தொகை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	காணி மற்றும் கட்டிடங்களை குத்தகை வழங்கல் மற்றும் தேயிலை கொழுந்து விற்பதற்குரியதாக மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 318,410,551 ஆன மீதியினுள் 3 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 121,148,546 ஆன மீதி	இந்த பெறவேண்டிய மீதிக் கணக்குகளிலுள்ள மீதிகள் சரியற்றதாக இருக்க முடியுமாவதுடன், கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள 6 ஆண்டுகளை விஞ்சிய ரூபா	பல ஆண்டுகளாக நிலவிவரும் அறவிட வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	காணப்படுவதுடன் ரூபா 2 மில்லியனிலும் அதிக 6 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 39,432,101 ஆன மீதியொன்றும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	39,432,103/- இனுள்ள அநேகமானவைகளிற்கு நிறுவனங்களிற்கு மீதி உறுதிப்பாட்டு கடிதம் அனுப்பியுள்ள போதும், அது தொடர்பான தகவல்கள் எமக்கு கிடைக்கவில்லை. மேலும் இந்த பெறவேண்டிய கணக்குகளை ஒப்பாய்வு செய்து சரிசெய்து அறவிட தேவையான நடவடிக்கை எடுக்குமாறு காணிப் பிரிவகளை அறிவுருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.	
(ஆ)	சபையின் தோட்டங்களிற்குரிய ரூபா 42,528,311 ஆன வியாபார கடன்படுனர் மீதியினுள் 05 தோட்டங்களிற்குரிய 2004 ஆண்டிலிருந்து கொழுந்து விற்பனைகளிற்குரிய ரூபா 2,641,925 ஆன கடன்படுனர் மீதிகள் மற்றும் 5 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 35,259,358 ஆன கடன்படுனர் மீதிகளும் பாவனையாளர் பிரிவில் 03 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 12,639,676 ஆன கடன் மீதிகளும் காணப்பட்ட போதும் அந்த மீதிகளை மீளாய்வாண்டு இறுதி வரை அறவிட்டிருக்கவில்லை.	ஆண்டு 5 இனை விஞ்சிய ரூபா 2,641,925 ஆன மீதி தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அத் தகவல்களின் பிரகாரம் இந்த மீதிகளை அறவிடும் இயலுமை தொடர்பாக மேலும் கண்டறிய வேண்டும். நுகர்வோர் பிரிவில் ரூபா 12,679,636 ஆன 03 ஆண்டுகளை விஞ்சிய மீதியிலிருந்து ரூபா 39,960 ஆன தொகை மாத்திரம் தற்போது பணம் கிடைத்துள்ளது.	சில காலமாக நிலவிவரும் கடன்படுனர் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6.2 செலுத்த வேண்டிய தொகை

கணக்காய்வு அவதானிப்பு	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரை**
தோட்டங்களினது கடன்கொடனர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் ரூபா 129,845,276 தொகையான கடன் கொடுனர் மீதியில், 18 தோட்டங்களில் 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த ரூபா 94,601,161 ஆன கடன்கொடுனர் மீதியொன்றும், 10 தோட்டங்களில் 4-5 ஆண்டிற்கிடையிலான ரூபா 4,183,637 தொகையான கடன்கொடுனர் மீதியொன்றும் ஆனது. மேலும் பிரதான அலுவலகத்திற்குரிய ரூபா 143,290,771 வியாபார கடன்கொடனர் பெறுமதியினுள் 6 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 83,500,633 மற்றும் 3-6 ஆண்டுகளிற்கு	நிறுவனத்தின் காணப்படும் கடும் தொழிற்பாட்ட மூலதன நிதி பற்றாக்குறைனால் இந்த கடன்கொடுனரிற்கு பணம் செலுத்துவது தாமதமாகியுள்ள போதும் எதிர்காலத்தில் பணம் காணப்படும்வாறு இந்த கடன்கொடுனரிற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இந்த கடன்கொடுனர் மீதிகளை சரியாக இனங்கண்டு தீர்ப்பதற்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இடையிலான ரூபா 13,658,407 ஆன கடன்கொடனர் மீதியொன்றும் ஆனது.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தும் சட்டத்தின் ii ஆம் பகுதியின் 5 (1) உப பிரிவு	ஊழியர் ஒருவர் ஓய்வு பெற்ற அல்லது மரணித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் பணிக்கொடை செலுத்தப்பட வேண்டிய போதும், மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 636,200,235 ஆன செலுத்த வேண்டிய பணிக்கொடை மீதி மற்றும் ரூபா 182,245,195 ஆன செலுத்த வேண்டிய மிகை அறவீட்டு மீதியும் காணப்பட்டது.	தொடர்ந்தும் நிறுவனத்தில் நிலவும் தொழிற்படு மூலதன நிதிரீதியான சிக்கல்கள் காரணமாக நிறுவன ஊழியர் பணிக்கொடை தொகையை உரியவாறு கொடுப்பனவு செய்ய முடியாதுள்ளதுடன், தற்போதளவில் வழங்கு தாக்கல் செய்த ஊழியர்களிற்கு 2023 ஆண்டில் அமைச்சரவை பத்திர இலக்கம் 23/0768/616/017 பிரகாரம் கிடைக்கும் ரூபா 30 மில்லியன் தொகையால் மற்றும் தற்போதைய காசுப் பாய்ச்சலினால் ஊழியர்கள் விலகிச் சென்ற அல்லது செல்லும் தொடர் முறையில் பணிக்கொடை தொகை செலுத்தப்பட்டு வருகின்றது.	பணிக்கொடை கொடுப்பனவு சட்டம் பிரகாரம் பணிக்கொடை உரிய காலத்தில் செலுத்த நடவடிக்கை எடுப்பதனூடாக சிக்கனமற்ற செலவுகளை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	1998 இன் 15 இலக்க திருத்திய ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் 15 ஆம் பிரிவு	செலுத்த வேண்டிய சேமலாபமாக ரூபா 995,794,224 தொகையும் தோட்ட பதவியணியினர் சேமலாப சங்கத்திற்கு (ESPS) மற்றும் இலங்கை பெருந்தோட்டதாரர்களின் சேமலாப சங்கத்திற்கு	நிறுவனத்தின் காணப்படும் கடும் தொழிற்படு மூலதன நிதி பற்றாக்குறையினால் 2000 ஆண்டு முதல் EPF/ETF தொடர்ந்தும் செலுத்த	சட்டம் பிரகாரம் சேமலாப நிதி தவணையை உரியவாறு செலுத்துவதனூடாக சிக்கனமற்ற செலவுகளை தவிர்த்துக் கொள்ள

		(CPPS) ரூபா 129,774,730 தொகை நிலுவை மீதியொன்றும் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு இறுதி நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மேற்குறித்த நிதியத்திற்காக ரூபா 39,824,048 தொகை செலுத்த வேண்டிய மிகை கட்டணத்தையும் செலுத்தியிருக்கவில்லை.	முடியாதிருந்ததுடன், நிதி அமைச்சில் இருந்து சில ஆண்டுகளில் இந்த நிலுவை நியதிச்சட்ட தொகை செலுத்துவதற்காக நிதி வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அத் தொகையால் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக 2023 ஆண்டில் அமைச்சரவை பத்திர இலக்கம் 23/0768/616/017 ரூபா 30 மில்லியன் தொகை ஒவ்வொறு மாதமும், இந்த நிலுவை நியதிச்சட்ட படியை மீண்டும் செலுத்துவதற்கு வழங்கப்பட்டு வருகின்றது. அதன் மூலம் நிலுவை நியதிச்சட்ட படிகளை மீண்டும் கொடுப்பனவு செய்யப்பட்டு வருகின்றது.	நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	1980 இன் 46 இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவு.	2011 ஆண்டு முதல் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 82,369,546 ஆன பங்களிப்பு தொகையை செலுத்தியிருக்காததுடன் மீளாய்வாண்டு இறுதி வரை நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 835,855 ஆன செலுத்த வேண்டிய மிகை அறவீட்டு மீதியுமானது.	நிறுவனத்தில் காணப்பட்ட கடுமையான செயற்படு மூலதன நிதி பற்றாக்குறை காரணமாக 2000 ஆண்டளவில் இருந்து EPF/ETF தொடர்ந்தும் செலுத்த முடியாதிருந்ததுடன், நிதி அமைச்சிலிருந்து சில ஆண்டுகளில் இந்த நிலுவை நியதிச் சட்ட தொகையை செலுத்துவதற்காக நிதி வழங்கப்பட்டுள்ளது.	சட்டம் பிரகாரம் சேமலாப நிதி தவணையை உரியவாறு செலுத்துவதனூடாக சிக்கனமற்ற செலவுகளை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

			அதன் பிரகாரம் அத் தொகையால் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக 2023 ஆண்டில் அமைச்சரவை பத்திர இலக்கம் 23/0768/616/017 பிரகாரம் ரூபா 30 மில்லியன் தொகையை ஒவ்வொறு மாதமும், இந்த நிலுவை நியதிச்சட்ட படிகளை மீண்டும் செலுத்துவதற்காக வழங்கப்பட்டு வருகின்றது. அதன் மூலம் நிலுவை நியதிச்சட்ட படிகளை மீண்டும் செலுத்திக் கொண்டு செல்லப்படுகின்றது.	
(ஈ)	2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 93 ஆம் பிரிவு	2021/2022 மதிப்பீட்டு ஆண்டிற்குரிய வருமான வரி அறிக்கை 2024 பெப்ரவரி 11 திகதி அனுப்பப்பட்டிருந்தது.	நிறுவன நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க தாமதித்த காரணத்தால் வருமான அறிக்கையை இறைவரி திணைக்களத்திற்கு அனுப்புவது தாமதித்துள்ளது. இறைவரி திணைக்களத்திற்கு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டியமை இதற்கு காரணமாகவுள்ளது. எனினும் 2024 ஆண்டில் இறைவரி திணைக்களத்துடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பிரகாரம் 2021 ஆண்டின் வரைவு நிதிக்கூற்றுக்களுடன்	சட்டம் பிரகாரம் மதிப்பீட்டு ஆண்டிற்குரிய வருமானங்கள் உள்ளடங்கிய வரி அறிககை உரியவாறு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வருமான வரி அறிக்கை 2024.02.11 திகதி இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

2. நிதி மீளாய்வு
2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 459,399,025 ஆன நட்டமாக காணப்பட்டதுடன் அதனோடு நேரொத்த கடந்த வருடத்தின் நட்டம் ரூபா 348,392,616 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 111,006,409 இனால் மொத்த நட்டத்தின் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த நட்ட அதிகரிப்பிற்கு முக்கியமாக சபையின் தேயிலை, இறப்பர் மற்றும் ஏனைய பயிர் செய்கைக்குரிய விற்பனை கிரயம் ஒட்டு மொத்தமாக 477,926,194 இனால் அதிகரித்தமை காரணமாக இருந்தது.

2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டில் தேயிலை கொழுந்து விற்பனையினால் கிடைத்த வருமானம் 2020 அண்டிற்கு ஒப்பாக 2021 ஆண்டில் 20 சதவீதத்தால் குறைந்துள்ளதுடன், இறப்பர் பயிர்களிலிருந்து கிடைத்த வருமானம் 2020 அண்டிற்கு ஒப்பாக 2021 ஆண்டில் 61 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2020 அண்டிற்கு ஒப்பாக 2021 ஆண்டில் தேயிலை கொழுந்து மற்றும் பாவனையாளர் பிரிவின் தேயிலை உற்பத்திக்குரிய கிரயம் முறையே 41 சதவீதத்தால் மற்றும் 10 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அவ்வாறே இறப்பர் பயிர்களிற்குரிய கிரயம் 2020 அண்டிற்கு ஒப்பாக 2021 ஆண்டில் 18 சதவீதத்தால் குறைந்திருந்தது.

2.3 விகிதப் பகுப்பாய்வு

- மீளாய்வாண்டில் மற்றும் கடந்த ஆண்டில் நடைமுறை விகிதம் மற்றும் சொத்து விரைவு விகிதம் 0.3:1 மற்றும் 0.3:1 ஆனது.

- மீளாய்வாண்டில் மொத்த நட்ட விகிதம் 44 சதவீதம் அனதுடன், கடந்த அண்டில் அவ் விகிதம் 34 சதவீதமானது.

- மீளாய்வாண்டில் தேறிய நட்ட விகிதம் 38 சதவீதமானதுடன், கடந்த ஆண்டின் போது அவ் விகிதம் 34 சதவீதமானது.

சபையின் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் மேற்குறிப்பிடப்பட்ட விகிதப் பரீட்சிப்பின் போது காணப்படும் நடைமுறை சொத்துக்களினால் அதன் நடைமுறை பொறுப்புக்களை தீர்க்கும் இயலுமை இல்லை எனவும் மொத்த மற்றும் தேறிய நட்ட நிலை தொடர்ச்சியாக காணப்படுவதால் மற்றும் நிறுவனத்தின் உரிமை மூலதனத்தை விஞ்சிய கடன் மூலதனம் காணப்படுவதால் நிறுவனத்தில் காணப்படும் நிதி நெருக்கடி மற்றும் தொடர்ந்தியங்கும் அபாயம் தொடர்பாக கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது.

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
சபையினால் செயற்படுத்தி இருந்த நடைமுறை வேலைகளில் உள்ளடங்கும் கொம்போஸ்ட் உள்ளடங்களாக சிறு ஏற்றுமதி பயிர் செயற்திட்டங்களிற்காக மீளாய்வாண்டில் இறுதி வரை ரூபா 27,814,517 ஆன கிரயம் மேற்கொள்ளப்பட்டு இருந்த போதும் தற்போது செயற்திட்டங்கள் செயற்படும் நிலையில் இருக்காததுடன் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் சிக்கனமற்ற செலவாக ஆகியிருந்தது.	இந்த நடைமுறை வேலைகள் தொடர்பான விபரங்கள் தோட்டங்களில் காணப்படுவதுடன் அத் தகவல்களை தலைமை அலுவலத்தினால் தோட்டங்களிலிருந்து கோரிய போதும் இதுவரை அவர்களால் தகவல்களை பெற்றுத் தரவில்லை. அதனால் இந்த செலவுகள் தொடர்பான தகவல்களை குறித்த தோட்டங்களில் இருந்து பெற்று பகுப்பாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	கிரயம் மற்றும் நலன்கள் தொடர்பாக சாத்தியப்பாட்டு அறிக்கையொன்றை மற்றும் சிறப்பான திட்டமொன்றின் மீது செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சி எடுக்க வேண்டியதுடன் சிக்கனமற்ற செலுவுகள் தொடர்பாக உள்ளக பரீட்சிப்பொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	விவசாய நிலைபேறான அபிவிருத்தி நோக்கை அடைந்து கொள்வதற்காக 2007 நவம்பர் மாதம் முதல் சபை மற்றும் தனியார் கம்பனியொன்றுடன் நாகஸ்தென்ன தோட்டத்தை குத்தகை வழங்க புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்த போதும், உடன்படிக்கை செய்து ஒரு வருடம் செல்ல முன்னர் தோட்டத்தின் 120 மரங்களை அனுமதியின்றி வெட்டி அகற்றிய காரணத்தால் அதனை மீண்டும் சபைக்கு சுவீகரித்திருந்ததுடன் அந்த மரங்களின் நட்டத்தை அறவிட 2008 மே மாதத்தில் பொலிஸ் குற்றவியல் திணைக்களத்தில் வழங்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. சபையின் பெறுத்தோட்ட முகாமையாளரினால் 2008 ஆண்டில் வழங்கிய வாக்கு மூலம் பிரகாரம் ரூபா 11,200,000 ஆன நட்டமொன்று சபைக்கு ஏற்பட்டுள்ளதாக அறிவித்திருந்த	விவசாய நிலைபேறான அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக 2007 நவம்பர் மாதம் நாகஸ்தென்ன தோட்டத்தை நிருவகிப்பதற்காக கூட்டு முயற்சியில் உடன்படிக்கை ஒன்றை கிவின்ரிச் எக்ரோ கம்பனியுடன் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கிவின்ரிச் எக்ரோ தனியார் கம்பனியினால் அக் கம்பனியில் முதலீடாக ரூபா 30 மில்லியன் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு செலுத்தியுள்ளது. அதன் பிரகாரம் தோட்ட நிருவாகம் கிவின்ரிச் எக்ரோ கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டதுடன் 2008 ஆண்டில் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் அங்கீகாரமின்றி அக்கம்பனியினால் பெறுமதியான மரங்களை வெட்டி அகற்றியுள்ளது. அதனால்	முறையான விசாரணை ஒன்றை நடாத்தி சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை சரியாக மதிப்பீடு செய்து அற்விட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	போதும் அந்த நட்டத்தை மதிப்பிட்டு அறவிட சபை நடவடிக்கை எடுத்திருக்காததுடன் வழக்கையும் இருதரப்பு உடன்பாட்டுடன் அகற்றிக் கொள்ளப்பட்டிருந்தது.	குற்றவியல் புலனாய்வு திணைக்களத்தில் வணிக குற்றவியல் புலனாய்வு பிரிவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இலங்கை பொலிஸினால் பீ 2683 கீழ் ருவன்வெல்ல மாவட்ட நீதிமன்றத்தில் வழங்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பொலிஸ் முறைப்பாட்டில் ரூபா 11.2 மில்லியனாக இந்த மரங்களின் பெறுமதி குறிப்பிடப்பட்டுள்ள போதும் 2009.12.18 ஆம் திகதி மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் கிவின்ரிச் எக்ரோ தனியார் கம்பனிக்கு இடையே கைச்சாத்திடப்பட்ட இநத வழக்குடன் தொடர்புடைய கடிதத்தினுள் இந்த மரங்களின் பொறுமதி ரூபா 7,529,688.40 தொகையென குறிப்பிடப்பட்டிருந்தது. தோட்டத்தில எஞ்சியுள்ள மரப் பகுதிகளின் பெறுமதி ரூபா 1,397,078.25 தொகையாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த கடிதத்தில் அவர்களால் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையில் வைப்புச் செய்துள்ள ரூபா 30 மில்லியனான கொடுப்பனவு மற்றும் அவர்களால் தோட்டத்தை நிருவகிக்கும் போது ஈடுபடுத்திய மூலதன செலவுகளில் இருந்து இந்த மரங்களின் பெறுமதியை பதிலீடு செய்துள்ளதாக அந்த கடிதம் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.	
(ஆ)	நாகஸ்தென்ன மற்றும் கந்தல்ஒய தோட்டங்களில் முறையே ரூபா 1,531,160 மற்றும் ரூபா 1,256,046 ஆன பணத் திருட்டு இடம்பெற்று சுமார் 10 ஆண்டுகள் கடந்துள்ள போதும், மீளாய்வாண்டு இறுதி வரை பொறுப்பான உத்தியோகத்தர்கள் இடமிருந்து நட்டத்தை அறவிட நடவடிககை எடுத்திருக்கவில்லை..	கந்தல்ஒய நாகஸ்தென்ன ஆகிய இரண்டு தோட்டங்களில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பான வழக்கு கண்டி நீதிமன்றத்தில் HC/223/20 வழக்கு இலக்கத்தின் கீழ் இதுவரை விசாரிக்கப்பட்டு வருகின்றது. 2025/03/06 திகதி நடத்த இந்த வழக்கு எதிர்வரும் 2025/06/20 திகதிக்கு விசாரிக்கப்பட உள்ளதுடன் எதிர்காலத்தில் கிடைக்கும் வழங்கு தீர்ப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணம் பிரகாரம் பொறுப்பான உத்தியோகத்தர்கள் இடமிருந்து நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ)	வொக்சோல் வீதியில் அமைந்துள்ள சபைக்கு சொந்தமான 2 களஞ்சியங்களை போட்டி விலை கோராது 2005 ஆண்டில் 30 ஆண்டுகளிற்கு ரூபா 105,000 ஆன மாதாந்த குத்தகை வாடகைக்கு தனியார் கம்பனியொன்றிற்கு குத்தகை வழங்கி அந்த குத்தகை உடன்படிக்கை முடிவடைய முன்னர் மீண்டும் அதே குத்தகைதாரருடன் 2011 ஆண்டில் ரூபா 105,000 ஆன மாதாந்த குத்தகை வாடகை பெறுமதிக்கு 30 ஆண்டுகளிற்கு குத்தகை உடன்படிக்கையிற்கு உட்பட்டிருந்தது. முதலாவது குத்தகை உடன்படிக்கை நிபந்தனை பிரகாரம், மாதாந்த மதிப்பீட்டு பெறுமதியின் அதிகரிப்பு ரூபா 95,000 வீதம் மாதாந்த 49 தவணைகளிற்காக ரூபா 4,655,000 தொகை மற்றும் ரூபா 175,000 வீதம் மாதாந்த 14 தவணைகளிற்காக ரூபா 2,450,000 தொகையாக ரூபா 7,105,000 தொகையை 2005 திசெம்பர் முதல் 2011 பெப்ரவரி வரை மதிப்பீட்டறிக்கையை அடிப்படையாக்க கொண்டு குத்தகை அறவிட வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் 2011 மார்ச் மாதத்தில் ஏற்படுத்தியிருந்த இரண்டாம் குத்தகை உடன்படிக்கையில் மதிப்பீடறிக்கை அடிப்படையில் குத்தகை அறவிடப்பட வேண்டுமென்ற உடன்படிக்யையின் பிரிவை அகற்றி உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததால் 2020 ஆண்டில் பெறப்பட்ட மதிப்பீட்டறிக்கை பிரகாரம் மாதாந்த மதிப்பீட்டு பெறுமதி ரூபா 224,000 ஆனதில் பெறுமதி அதிகரிப்பு ரூபா 119,000 வீதம் 58 மாதாந்த தவணைகளிற்காக ரூபா 6,902,000 தொகை மற்றும் ரூபா 353,000 வீதம் 36 மாதாந்த	இல.175, வொக்சோல் வீதி கொழும்பு 02 அமைந்துள்ள இரண்டு களஞ்சியங்களை போட்டி விலை கோராது 2005 ஆண்டில் நடந்த நிருவாக அதிகாரத்தினால் நிலோனா லங்கா தனியார் கம்பனிக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் அந்த இரண்டு குத்தகை உடன்படிக்கைகளிற்கு உரிய களஞ்சியங்களை மாற்றி 2011 ஆண்டில் மீண்டும் ஒரு குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இருந்தது. 2011 ஆண்டில் கைச்சாத்திட்ட குத்தகை உடன்படிக்கையில் அரசம திப்பீட்டின் மீது குத்தகை தொகையை திருத்துவதற்குரிய நிபந்தனைகள் உள்ளடக்கப்படாததால் குத்தகை தொகையை திருத்த முடியாதிருந்தது. இவ்வாறான குத்தகை உடன்படிக்கை தொடர்பாக சட்டமா அதிபரிடம் விடயங்களை வினவியுள்ள போதும் இருதரப்பு இணக்கப்பாடு இன்றி நிபந்தனை உட்படுத்துதல் அல்லது திருத்த முடியாதென அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால் குத்தகை தொகையை அதிகரிக்கும் இயலுமை காணப்படவில்லை. மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கு 21271/எல், 21371/எல் இலக்கத்தின் கீழ் 2014.12.15 திகதி வழங்கியுள்ள முடிவின் பிரகாரம் அந்த குத்தகை உடன்படிக்கைக்காக புதிய குத்தகை உடன்படிக்கையை கைச்சாத்திடும் இயலுமை இல்லை. அவ்வாறே நகர அபிவிருத்தி அதிபார சபையினால் இந்த காணியை சுவீகரிப்பது தொடர்பாக அமைச்சரவை அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. மேற்குறித்த விடயங்களின் மீது	குத்தகை உடன்படிக்கை பிரகாரம் மதிப்பீட்டறிக்கையை அடிப்படையாக்க கொண்டு நிலுவை குத்தகை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். குத்தகை உடன்படிக்கையை தயாரிக்கும் போது குத்தகை தொகை அதிகரிப்பதனை கவனத்திற் கொள்ளாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	தவணைகளிற்காக ரூபா 12,708,000 ஆக மற்றும் ரூபா 438,000 வீதம் 36 மாதாந்த தவணைகளிற்காக ரூபா 15,768,000 ஆக ரூபா 35,378,000 தொகை 2011 மார்ச் முதல் 2021 திசெம்பர் வரை மதிப்பீட்டறிக்கை பிரகாரம் அறவிடப்பட வேண்டிய குத்தகை வருமானத்தை சபை இழந்திருந்தது.	காணித் துண்டுகளிற்காக குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்தல் அல்லது திருத்தத்தை மேற்கொள்ள முடியாததால் இந்த நிலைமை எழுந்துள்ளது.	

3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி தலைமை அலுவலகத்தில் மற்றும் தோட்டங்களில் 7 கணக்கீட்டு செயற்பாடுகளை மேற்கொள்ள மென்பொருள் முறைமை ஒன்றிற்காக தனியார் கம்பனியொன்றிற்கு 2021 ஆண்டு முதல் 2025 ஏப்ரல் 30 வரை மென்பொருளை இஸ்தாபிப்பதற்காக மற்றும் மாதாந்த கொடுப்பனவாக ரூபா 13,989,750 தொகையை உடன்படிக்கை பிரகாரம் செலுத்தி இருந்த போதும், மென்பொருள் முறைமையின் மூலம் கூட்டிணைந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், இருப்புக் கட்டுப்பாடு, வருமானம் மற்றும் செலவினக் கட்டுப்பாடு ஆகிய நோக்கங்கள் உரியவாறு அடையப் பெற்றிருக்கவில்லை.	இந்த கணக்கீட்டு முறைமையின் குறைபாடுகள் தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு மற்றும் பணிப்பாளர் சபைக்கு பல சந்தர்ப்பங்களில் எழுத்து மூலம் மற்றும் வாய் வழிவாக அறிவித்துள்ள போதும் அதற்கான கொடுப்பனவை இடைநிறுத்த எந்தத் தரப்பினராலும் அறிவுரை வழங்கவில்லை.	கணக்கீட்டு முறைமை ஊடாக எதிர்பார்த்த நோக்கங்கள் அடையப் பெறவில்லை எனில் அது தொடர்பாக பரீட்சிப்பொன்றை மேற்கொண்டு அதன் குறைகளை நிவர்த்திக்கவும் மேற்கொள்ளப்படாத செயற்பாடுகளிற்காக செலுத்திய தொகையை மீள் அறவிட அல்லது புதிய கணக்கீட்டு முறைமையொன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	1972 இன் 01 இலக்க காணி மறுசீரமைப்பு சட்டத்தின் கீழ் இரத்தினபுரி ராஸ்சகல தோட்டத்தின் 1824 ஏக்கர் 01 ரூட் 36 பர்சஸ் காணியின் 50 ஏக்கரிலும் அதிக வெளியீட்டாளர்கள் 20 பேர்களிற்காக 1,270 ஏக்கர் 02 ரூட் 30 பர்சஸ் இனை 1996 திசெம்பர் 05 திகதி கடிதம் பிரகாரம் ஆணைக்குழு சுவீகரித்திருந்தது. காணி மறுசீரமைப்பு சட்டத்தின் கீழ் வெளியீட்டாளர்கள் அல்லாத 50 ஏக்கரிலும் குறைந்த 24 காணி உரிமையாளர்களிற்கு 462 ஏக்கர் 02 ரூட் 14 பர்சஸ் உரித்தாக இருந்ததுடன் நியதிச்சட்ட குறித்து ஒதுக்களின் கீழ் இரண்டு	குறித்த தரப்பினரிற்கு ராஸ்சகல தோட்டத்தில் அல்லது ஏனைய மாற்று காணி வழங்குமாறு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு தலைவரினால் இலங்கை பெறுந்தோட்ட கூட்டுத்தாபனத்திடம் கோரிக்கை விடுத்து பெறுந்தோட்ட கூட்டுத்தாபனத்தினால் 7/SLSPC/ஒக்டோபர்/2003 கொண்ட பணிப்பாளர் சபை பத்திரத்திற்கு அங்கீகாரம் வழங்கியிருந்ததுடன் பின்னர் இந்த காணியை பெற்றுக் கொள்வதற்காக வழக்கு இலக்கம் 1042/98 இன் கீழ் 04 தரப்பினர்களிற்கு எதிராக	மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையிற்கு விவசாய செயற்பாடுகளிற்காக வழங்கிய காணி வெளித்தரப்பினரிற்கு வழங்கவது தொடர்பாக விசாரணை நடாத்தி பொறுப்பான உத்தியோகத்தர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நபர்களிற்கு 91 ஏக்கர் 32 பர்சஸ் ஆன பிரிக்கப்படாத காணிகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

தரப்பினர் 46 பேர்களிற்கு இடையே வெளியீட்டாளர்கள் அல்லாத 24 தரப்பினர்களிற்கு அரச பெறுந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ஹாகல தோட்டத்தின் 206 ஹெக்டயார்களை வழங்கவும், வெளியீட்டாளர்கள் அல்லாத முன்னால் அமைச்சரின் மனைவியின் கோரிக்கை மற்றும் சபையின் இணக்கப்பாட்டுடன் அவரிற்கு மற்றும் அவரின் சகோதரனிற்கு ஹன்தான தோட்டத்தின் 45 ஏக்கர் 1 ரூட் 16 பர்சஸ் வழங்க அரச பெறுந்தோட்ட கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை பத்திர இலக்கம் 07/SLSPC/October/2003 இற்கு குறித்த பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. (பணிப்பாளர் சபை பத்திரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.)

பின்னர் அந்த இருவருக்கும் இரண்டு ஒப்படை உறுதிகள் மூலம் 2003 நவம்பர் 13 மற்றும் 2004 சனவரி 19 (உறுதி இலக்கம் 96 மற்றும் உறுதி இலக்கம் 3775) ஆகிய திகதிகளில் சபையின் முன்னால் தவிசாளர் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர் ஒருவரினால் உரிமை ஒப்படைக்கப்பட்டு இருந்தது.

வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் வழங்கிற்காக சமர்ப்பிக்கப்பட்ட மத்தியஸ்த நிபந்தனைகள் மீது ஹன்தான தோட்டத்தின் 43 ஏக்கர் 01 ரூட் 16 பர்சஸ் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. அதற்காக மேலதிக தகவல்களை பெற்று உறுதி செய்து கொண்ட பின்னர் கணக்காய்வு ஐயவினாவிற்கு பதில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) சபை நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் தோட்டங்களினால் உழைக்கும் ஏனைய வருமானங்கள் தவிர பிரதான வருமான மூலமான தேயிலை கொழுந்து விற்பனை வருமானம், உற்பத்தி தேயிலை விற்பனை வருமானம், தோட்டத்தில் தேயிலை விற்பனை வருமானம் மற்றும் இறப்பர் பால் விற்பனையால் உழைக்கும் மொத்த வருடாந்த வருமானம்

இந்த விற்பனை கிரயம் அதிகரிப்பதற்கான காரணங்களிற்கிடையே முக்கிய காரணமாவது தோட்ட ஊழியர், தொழிலாளர் சம்பளம் கூட்டு ஒப்பந்தம் மூலம் அதிகரிக்கப்பட்டமை, வருமானம் தீர்மானிக்கப்படும் தேயிலை விலை கொழும்பு தரகர்கள் ஏலவிற்பனையில் தீர்மானிக்கப்படலும், செயற்படு

தேயிலை பதனிடுவதற்காக மற்றும் கிரயத்தை குறைத்து இலாபத்தை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மற்றும் பாவனையாளர் பிரிவின் தேயிலை விற்பனை ஆகிய வருமானங்களின் கூட்டுத் தொகை ரூபா 1,204,225,143 ஆனதுடன் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் விற்பனை கிரயம் ரூபா 1,740,151,580 ஆகவிருந்தது. அதன் பிரகாரம் சபைக்கு அதன் முக்கிய செலவினத்தை விஞ்சி வருமானம் உழைக்க இயலாதிருந்தது.	மூலதன பற்றாக்குறை காரணமாக சரியான விவசாய ரீதியான உள்ளீடுகளை இடுவதற்கு முடியாது போனமை. மிகவும் சிறப்பான நிலையில் தேயிலை கொழுந்துகளை பெற்றுக் கொள்ள முடியாததன் மீது தேயிலை கொழுந்திற்காக நள்ள விலையை பெற்றுக் கொள்ளவும் மற்றும் நள்ள தேயிலை உற்பத்தியை பெற்றுக் கொள்ளவும் முடியாதமை வருமானம் குறைவடைய காரணமாகவுள்ளது. 2021 ஆண்டில் தொழிலாளர் சம்பளம் அதிகரித்த காரணத்தால் பணிக்கொடை ஒதுக்கீடு கடந்த ஆண்டிற்கு ஒப்பாக சுமார் ரூபா 235 மில்லியனினால் அதிகரித்தமை. இந்த பணிக்கொடை படிகளை ஒதுக்குதல் மற்றும் தொழிலாளர் சம்பள அதிகரிப்பு விற்பனை கிரயம் அதிகரிப்பதற்கு ஒப்பாக தாக்கம் செலுத்தியுள்ளதுடன் அது செயற்பாட்டு நடவடிக்கைகளினால் வெளிப்படுத்தப்படுகின்றது.	

3.4 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
சபையின் மற்றும் தோட்டங்களின் வருமானத்திலிருந்து 0.25 சதவீதம் செலவு வைத்து முறையான அங்கீகாரமின்றி "தலைவர் நலன்புரி நிதியம்" பெயரில் நிதியமொன்று 2020 ஆண்டின் போது நிறுவப்பட்டிருந்தது. இந்த நிதியத்திற்கு மீளாய்வாண்டு தேயிலை மற்றும் இறப்பர் வருமானத்திலிருந்து ரூபா 1,993,624 தொகையும், ஜன தேயிலை பிரிவின் வருமானத்திலிருந்து ரூபா 924,040 தொகையுமாக ரூபா 2,917,664 தொகை செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் இந்த நிதியத்திலிருந்து ஊழியர் மதிப்பீடு மற்றும் பல்வேறு அன்பளிப்புகளிற்காக ரூபா	இந்த செலவு வைத்தல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இப் பணிப்பாளர் சபையில் வரிசை அமைச்சு மற்றும் நிதி அமைச்சு கட்டளை காணப்படுவதால் குறித்த அங்கீகாரம் பெற்றுள்ளதாக குறிப்பிடுகிறேன். அதன் பிரகாரம் முறையான அங்கீகாரமின்றி இந்த நிதியம் நிறுவப்பட்டதாக குறிப்பிட முடியாதென குறிப்பிடப்படுகின்றது.	நிதியத்தை நிறுவுவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை போன்றே திறைசேரியினதும் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யும் போது வெளிப்படைத் தன்மையை உறுதி செய்ய வேண்டும்.

4,683,175 தொகை மீளாய்வாண்டில் செலவிடப்பட்டு இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 600,161 ஆன மீதி எஞ்சியிருந்தது.